காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி – மாணவர் அணி ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் பி.குணாளன், மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், இளைஞர் அணி, மாணவர் அணி மாவட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

திருப்பூர் மாநகராட்சி, நொய்யல் நதிக்கரையில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம், திருப்பூர் மாநகராட்சி மற்றும் நொய்யல் பண்பாட்டு அமைப்பு இணைந்து மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மாவட்டச் செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற திருப்பூர் பொங்கல் திருவிழா கலைநிகழ்ச்சி மற்றும் திண்டுக்கல் சக்தி கலைக்குழுவினர் மூலம் சிந்துவெளி குறியீடுகளை கோலமாக வரையப் பட்டுள்ளதை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பார்வையிட்டனர். இதில் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேயர் பிரியாராஜன் தலைமையில் 11–வது நாளாக மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

வில்லிவாக்கம் தொகுதியில் மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வீதி வீதியாக சென்று குறை கேட்கிறார்!

சென்னை, ஜன.20- மேயர். பிரியா ராஜன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டம் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லி வாக்கம் தொகுதியில் பாக வாரியாக பதினொன்றா வது நாளாக மக்கள் தேவை கள் தீர்க்கும் பயணத்தில் அமைச்சர் - மாவட்ட செய லாளர் பி.கே.சேகர் பாபு மக்கள் தேவைகள் கேட்கி றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுத லின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத் தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட் டத்திற்கு உட்பட்ட கொளத்தூர் அம்பத்தூர் வில்லிவாக்கம் திருவிக நகர் எழும்பூர் துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிக ளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள் மாநக ராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்க ளில் பொதுமக்கள் தேவை களை கண்டறியும் சிறப்பு முகாம் இன்று பதினொன் றாவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் இன்று (20.01.2025) காலை 7.30 மணியளவில் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி, 8 வது மண்டலம், வட்டம்94 வட்டத்தில் மேயர் திருமதி. பிரியா ராஜன் தலைமை யில், சட்டமன்ற உறுப்பி னர் அ.வெற்றி அழகன், மண்டல குழு தலைவரும் பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ. ஜெயின் முன்னிலை யில் இந்து சமய அறநிலை யத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 94 வட்டத்தில் உள்ள சிட்கோ நகர் பகுதியில் வீதி வீதியாக சென்று மக்களை நேரடியாக சந்தித்து தேவை கள் கேட்டறிகிறார்.

இந்நிகழ்ச்சியில் வில்லி வாக்கம் மேற்கு பகுதிக்குட் பட்ட கழக நிர்வாகிகள், சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரி யம், தமிழ்நாடு மின் உற் பத்தி மற்றும் மின்பகிர்மா னக் கழக அலுவலர்கள் ஆகி யோர் கலந்து கொள்கின்ற னர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! க. பாலாஜி தலைமை! சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

மனிதநேய உதயநாளை முன்னிட்டு - மாபெரும் கோலப்போட்டி!

மகளிர் அணிச் செயலாளர் திருமதி.ஹெலன் டேவிட்சன் – மேயர் பிரியா ராஜன் பரிசு வழங்குகின்றனர்!

சென்னை, ஜன.20- சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளை ஞர் அணி சார்பில் மனித நேய உதயநாளை முன் னிட்டு உதயம் -24, பெண்களிடும் கோலம் அழ கானது, மண் முழுவதும் உதயம் நமக்கானது எனும் தலைப்பில் 300 மங்கையர் கள் பங்கு பெறும் மாபெ ரும் கோலப்போட்டி நிகழ்ச்சி நாளை (21.1.2025 செவ்வாய்கிழமை) மாலை 04.00 மணியளவில், சென்னை, ஏழுகிணறு தெரு அம்மன் கோயில் தெருவில் நடைபெறுகிறது.

இக்கோலப்போட்டியில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.பாலாஜி தலைமை வகிக் கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாள ரும், இந்து சமய அறநிலை யத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ். இராஜசேகர், எஸ். முரளி, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப. ஸ்ரீராமுலு எம்.சி, இசட். ஆசாத் எம்.சி, எல்.நவீன் எம்.சி, எம்.பி.என்.ஷேக் அப்துல்லா, டி.லோகேஷ், பா.ஜெகதீஷ், எம்.இப்ரா ஹிம்கனி, இரா.கலைச் செல்வி, ப.விஜயகுமார், எம். வினாயகம், பா.பிரதீப் குமார், எல்.சம்பத்குமார், சி.மகேஷ்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் கோலப் போட்டியில் 300 மங்கையர் களுக்கு, கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் , மேயர் பிரியா ராஜன் ஆகியோர் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், இவ்விழாவில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாய கம்கவி எம்.எல்.ஏ, அ.வெற் றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம். எல்.ஏ, இரா.நரேந்திரன். மாநில நிர்வாகிகள்: ப.ரங்க நாதன், கே.எஸ்.இரவிச்சந்தி ரன், தமிழன்பிரசன்னா, பரி திஇளம்சுருதி எம்.சி, கே. சந்துரு, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எஸ். மணிமுடி எம்.சி, சங்கரிநா ராயணன். கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிவதி எத்தி ராசன் எம்.சி. பி.கே.மூர்த்தி எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி. ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதா கர், வே.வாசு, எம்.சாமிக் கண்ணு, செ.தமிழ்வந்தன், எம்.டி.ஆர்.நாகராஜ், DSP. ராஜகோபால், கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி. வி.செம்மொழி, பி.ஜே.துள சிங்கம், பி.உதயகுமார், சாவித்திரி வீரராகவன், அ.நிர்மலாதேவி, ஜே.பால முருகன், க.வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தனசே கர், சங்கர்நானா, வானவில் விஜய், நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், ஜி. தாமோதரன், சுதாதீனத யாளன் எம்.சி, ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி, துரைகண் ணன், எம்.பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.எஸ்.சித்திக், வே.பரிம எம், ராஜேஷ்ஜெயின் ஆகி யோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செய லாளர்கள் எல்.சத்தியநாரா யணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் பங்கேற்பு!

மதுரவாயல் 147 வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஜன. 20 - மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழ கச் செயலாளர் மேட்டுக் குப்பம் லயன் எஸ்.ஜி.மாத வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டம், மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதல்வர், மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் வருகையையொட்டி வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (20.1.2025 - திங்கட் கிழமை) மாலை 6 மணி அளவில் ஆலப்பாக்கம் 147 வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் வட்ட அவைத் தலைவர் வெங்க டேச பெருமாள் தலைமை யில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி, கல் விக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

ஆகவே வட்டத்திற்குட் பட்ட மாவட்டக் கழக, பகு திக் கழக, வட்டக் கழக நிர் வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர் கள் மற்றும் துணை அமைப் பாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர் கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறன்.

இவ்வாறு மேனாள் கவுன்சிலர், 147 வது வட் டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள் மற்றும் மொழிப் போர் தியாகிகள் வீரவ ணக்க நாள் பொதுக்கூட் டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்க ளின் வருகை குறித்து ஆலோசனை நடைபெறுகி றது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை –

அமராவதி அணை - திருமூர்த்தி அணைகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - இரா.இராஜேந்திரன் - என்.கயல்விழி செல்வராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருப்பூர், ஜன. 20 - திருப்பூர் மாவட்டம் அமராவதி கூட்டுறவு சர்க் கரை ஆலை மற்றும் அமரா வதி அணை மற்றும் திரு மூர்த்தி அணைகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் குறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மனி தவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் வடிப்பாலை, உடும லைப்பேட்டை வட்டம். அமராவதி அணை மற்றும் திருமூர்த்தி அணைகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் குறித்து நேற்று (19.01.2025 ஞாயற்றுக்கி ழமை) மாவட்ட ஆட்சித்த லைவர் திரு.தா. கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள் ளாச்சி நாடாளுமன்ற உறுப் பினர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய் தித்துறை அமைச்சர் மு.பெ.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட அலுவலர் (தீயணைப்புத்துறை) திரு.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

சாமிநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந் திரன், மனிதவள மேலாண் மைத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகி யோர் நேரில் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண் டனர்.

சுற்றுலாத்துறை அமைச் சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது : தமிழ் நாடு முதலமைச்சர் அவர் கள் தமிழக மக்கள் முன் னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற் றும் தமிழ்நாடு துணை முத லமைச்சர் அவர்கள் ஆகி யோர் ஆணையின்படி இன்றைய தினம். மடத்துக் குளம் வட்டம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் வடிப்பாலையினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கரும்பு உற் பத்தி செய்யும் விவசாயிகளுடன் கலந்து ரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்ட றிந்து ஆலையின் உற்பத்தி மற்றும் புனரமைக்கும் பணி கள் குறித்து ஆய்வு மேற் கொண்டோம்.

தொடர்ந்து உடுமலைப் பேட்டை வட்டம். அமரா வதி அணை நீர்தேக்க முத லைப் பண்ணையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும். அமராவதி அணைக்கு தினந்தோறும் வந்து செல்லும் சுற்றுலா பய ணிகள் விவரம் குறித்தும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித் தும். சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வண்ணம் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட் டது. அமராவதி அணையில் சிதிலம் அடைந்த 15 ஏக்கர் பரப்பளவில் உள்ள பூங் காவை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ,5.15 கோடி ம தி ப் பீ ட் டி ல் நீர்வளத்துறையிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு அர சுக்கு அனுப்பப்பட்டுள் ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண் டிய நடவடிக்கைகள் குறித்து நீர்வளத்துறை அலு வலர்களுடன் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. அத னைத் தொடர்ந்து. திருமூர்த்தி அணையில் புதிய பூங்கா உருவாக்கி சுற் றுலாத் தலமாக மேம்படுத் துவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு ரூ. 18.50 கோடி மதிப்பீட்டில் நீர்வ ளத்துறையிடமிருந்து கருத் துரு பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக நீர்வளத்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ் வரர் திருக்கோவிலிலை நேரில் பார்வையிட்டு சுற்று லாப் பயணிகள் வருகை குறித்து ஆய்வு மேற்கொள் ளப்பட்டது. அமணலிங் கேஸ்வரர் திருக்கோவில் மற்றும் பஞ்சலிங்க அருவி மேம்பாட்டு பணிக்காக ரூ.39.00 லட்சம் மதிப்பீட் டில் கருத்துரு இந்து சமய அ ற நி லை ய துறையிடமிருந்து பெறப் பட்டுள்ளது என்று அமைச் சர் தெரிவித்தார்.

இந்தஆய்வின் போது மாவட்ட இளைஞர் அணி அ மை ப் பா ள ர் மு.ஜெயக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ஏ.சாகுல் அமீது, எஸ். கே.எம்.தங்கராஜ், த.செழி யன், செயற்குழு உறுப்பி னர் மகாலிங்கம், பொதுக் குழு உறுப்பினர்கள் ராமசாமி, பாபு, உடுமலைப் பேட்டை நகர்மன்ற தலை வர் எம்.மத்தீன், ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் கள் மகாலட்சுமி முருகன், காவியா ஐயப்பன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் க.சாமி, திருமூர்த்தி மலை அறங்கா வலர் குழு தலைவர் ஈ.சிஆர் ரவி, தளி பேரூர் கழக செய லாளர் உதயகுமார், ஒன் றிய அவைத்தலைவர் மாரி முத்து, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பி. எஸ்.தங்கராஜ், மாவட்ட தொண்டரணி அமைப்பா ளர் ரமேஷ், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கலையரசு, சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குனர் பி.பாலமுருகன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணைய மேலாண்மை இயக்குநர் டி.ரமணி தேவி, உடுமலைப்பேட்டை வரு வாய் கோட்டாட்சியர் (பொ) மோகனசுந்தரம், மாவட்ட அலுவலர் (தீய ணைப்புத்துறை) அண்ணா துரை, நீர்வளத்துறை செயற்பொறியாளர்கள் சுப் பிரமணியம், (அமராவதி அணை), மகேந்திரன் (திரு மூர்த்தி அணை), உதவி செயற்பொறியாளர் பாலசுப் பரமணியம் (அமராவதி அணை), மாவட்ட சுற் றுலா அலுவலர் அரவிந்த்கு மார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மண்டல மேலாளர் குணேஸ்வரன், ஆலையின் செயலாட்சியர் யோகவிஷ்ணு, தலைமை பொறியாளர் சக்திவேல் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி திருநின்றவூர் நகராட்சிக்குட்பட்ட 4 வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் அதிமுக வட்டக் கழக செயலாளர் என்.கலைமணி அக்கட்சியிலிருந்து விலகி திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தார். இதில் நகரக் கழக துணைச் செயலாளர் நாகராஜ், நகரக் கழக இலக்கிய அணி அமைப்பாளர் பி.எல்.ஆர். யோகா, ஜெயக்குமார், சி.தங்கராஜ், வி.ஆறுமுக ராஜா உள்ளனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி வாக்குச் சாவடி பாக உறுப்பினர்கள் BLC குறித்து ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளர் மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்கள் மாவட்ட நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு. கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே. சந்திரசேகர், கி.வே.ஆனந்தகுமார், ஆ.சத்தியவேலு, ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம், இரா.அறிவழகன், அபிராமிகுமரவேல் பங்கேற்றனர்.